# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035

தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 03.06.2025**

**முன்னிலை**

## திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)
## மாநில தலைமை தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 20420/SCIC/2023**

திரு.கெ.பொம்முராஜ் த/பெ.கெங்கம நாயக்கர் — மேல்முறையீட்டாளர்
ஒண்டிவாடா நாயக்கன்பட்டி
பழக்கநூத்து (அஞ்சல்)
திண்டுக்கல் மேற்கு (வட்டம்)
திண்டுக்கல் - 626 619.

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்) .... பொதுஅதிகார அமைப்பு
மாவட்ட பதிவாளர் அலுவலகம்
பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 26.08.2023 |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 21.09.2023 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 08.10.2023 |
| 4. | இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 14.11.2023 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 08.01.2025 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபணை மனு | 17.02.2025 |

1. மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பழனி அவர்களுக்கு அனுப்பிய மனுவில், கீழ்க்கண்டவாறு கோரியுள்ளார், “பொருள்- திண்டுக்கல், பழனி பதிவு மாவட்டம், பதிவுத்துறையில் மோசடி பத்திரம் ரத்து செய்ய புகார் மனுக்கள் - தொடர்பாக - பத்திரம் ரத்து செய்ய புகார் மனு கிடைக்கப் பெற்ற நாளில் இருந்து எத்தனை நாட்களுக்குள் தீர்வு வழங்க வேண்டும் என்பதற்கான அரசாணை நகல் சான்றொப்பம் இட்டு வழங்கவும்” என்பன போன்று 6 (ஆறு) இனங்களில் தகவல்களை வழங்கக் கோரியுள்ளார்.

**2. இன்றைய (03/06/2025) விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. எவ்வித கடிதமும் மனுதாரரிடமிருந்து பெறப்படவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள் 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அன்னாரது வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு த.மகேஷ், மாவட்டப் பதிவாளர் (நிர்வாகம்) பழனி பதிவு மாவட்டம், (கூடுதல் பொறுப்பு) அவர்கள் ஆஜராகி ஏற்கனவே மனுதாரருக்கு 21/09/2023, 18/10/2023 மற்றும் 08/01/2025 ஆகிய தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர், 17/02/2025 தேதியிட்டு தனது ஆட்சேபணை மனுவினை அனுப்பியுள்ளார். இருப்பினும், ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(முகம்மது ஷகீல் அ்்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 20420/SCIC/2023</u>**

**பெறுநர்**
**பொதுஅதிகார அமைப்பு**
பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்)
மாவட்ட பதிவாளர் அலுவலகம்
பழனி, திண்டுக்கல் மாவட்டம்.

**மேல்முறையீட்டாளர்**
திரு.கெ.பொம்முராஜ் த/பெ.கெங்கம நாயக்கர்
ஒண்டிவாடா நாயக்கன்பட்டி
பழக்கநூத்து (அஞ்சல்)
திண்டுக்கல் மேற்கு (வட்டம்)
திண்டுக்கல் - 626 619.
RG/PC